அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு நாளைக்கு அரிசி, ஒரு நாளைக்கு பருப்பு, ஒரு நாளைக்கு பாமாயில் வழங்குவதாகச் சொன்னார்கள். ஒரு மாதத்தில் 25 ஆம் தேதியிலிருந்து எந்தப் பொருட்களை வழங்கப் போகிறார்களோ அந்த மாத இறுதியில், 30 ஆம் தேதிக்குள் 60 சதவிகிதம், 5 ஆம் தேதிக்குள் 40 சதவிகிதம் என அனைத்துப் பொருட்களும் கடைகளுக்கு நகர்வு செய்யப்பட்டுவிடுகின்றன. எனவே, அனைத்துப் பொருட்களும், அனைத்து நேரங்களிலும் உடனடியாக வழங்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

8—

கால்நடைக் கிளை நிலையம்

***20739—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, வாழவச்சனூரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, தண்டாரம்பட்டு ஊராட்சி ஒன்றியம், வாழவச்சனூரில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 1,485 மட்டுமே உள்ளது. புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு குறைந்தது 3,000 கால்நடை அலகுகளாவது இருக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வாழவச்சனூரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாழவச்சனூர் கிராமம் என்பது கொட்டியூர் கிராமத்தின் துணை கிராமம் ஆகும். அது கொட்டியூர் ஊராட்சியில் உள்ள பெரிய கிராமம். அந்தக் கிராமத்தின் பக்கத்திலே சதாகுப்பம் ஊராட்சி இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே அகரம்பள்ளிப்பட்டு ஊராட்சி இருக்கிறது. வாழவச்சனூர் என்பது ஒரு பிரசித்தி பெற்ற வாரச் சந்தை நடைபெறும் கிராமம் என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடைக் கிளை நிலையத்தை கட்டாயம் அங்கு அமைத்துத்தர வேண்டும். ஏனென்று சொன்னால், இப்போது அங்கு விவசாயம் செய்ய முடியாத நிலையில், தண்ணீர் பஞ்சத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த நிலையிலே, தென்பெண்ணை ஆற்றின் கரையோரம் இருக்கின்ற வாழவச்சனூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுக்கவும், அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயப் பெருமக்கள் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளைப் பாதுகாக்கவும் இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருந்த வாழவச்சனூர் கிராமத்திலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் மூங்கில்துறைப்பட்டு என்ற கிராமத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேலும், எட்டு கிலோ மீட்டர் தொலைவில் கால்நடை மருந்தகம் ஒன்று வாணாபுரம் என்ற இடத்தில் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, வாழவச்சனூரில் அதிக அளவில் கால்நடைகள் இருப்பதாகவும்,

எனவே அங்கு கால்நடைக் கிளை நிலையம் அவசியம் வேண்டுமென்றும் கோரினார்கள். நான் துறையின் அலுவலர்களை அந்தப் பகுதிக்கு அனுப்பி, கால்நடைக் கிளை நிலையம் தேவையெனில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆய்வு செய்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேல்செங்கம் பகுதியில் 12,000 ஏக்கர் பரப்பளவில் மத்திய மாநில விவசாயப் பண்ணை இருக்கிறது. அந்தப் பண்ணையில் இருக்கின்ற 12,000 ஏக்கர் நிலத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று நான் பலமுறை இந்த அவையில் கோரிக்கையாக வைத்திருக்கிறேன். அந்தப் பண்ணையில் இப்போது நீலகிரி மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. அதனால் நிலத்தடி நீர் அதிக அளவில் உறிஞ்சப்படுவதால் நிலத்தடி நீர் 1,000 அடிக்குக் கீழே சென்றுவிட்டது. அதனால் எங்கள் தொகுதியில் தண்ணீர் பஞ்சம் வந்துவிட்டது. வேறு துறையின் இடமாக இருந்தாலும், சாக்கு சொல்லாமல், அந்த இடத்தைக் கையகப்படுத்தி அல்லது கால்நடைத் துறையாவது இடத்தை எடுத்து அங்கே ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியும், ஆராய்ச்சி நிலையமும் உருவாக்கித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்தில் கால்நடைக் கல்லூரி வேண்டுமென்று கேட்கின்றார். கால்நடைக் கல்லூரி அமைக்க வேண்டுமென்றால் குறைந்தது 200 ஏக்கருக்கு அதிகமான நிலம் வேண்டும். மேலும், இன்றைக்கு சேலம் மாவட்டம் அருகில் உள்ள தலைவாசலில் தெற்கு ஆசியாவிலேயே மிகச் சிறந்த கால்நடைப் பூங்கா ஒன்றை அமைக்கவிருக்கிறோம். அந்தப் பூங்காவில் கால்நடைகளுக்குத்

2019 ஜூலை 1]

தேவையான அனைத்துவிதமான பணிகளையும் மேற்கொள்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அங்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடிய விரைவில் அடிக்கல் நாட்ட இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்கள் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் நிலம் இருக்கின்றபட்சத்தில், தண்ணீர் வசதி இருக்கின்றபட்சத்தில் கால்நடைத் துறையின்மூலம் ஏதேனும் ஒரு பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, இங்கே பேசிய முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ரகுபதி அவர்கள், தீவனம் இல்லாமல் ஆடு, மாடுகள் இறந்து போவதாகச் சொன்னார்கள். அது முற்றிலும் தவறு என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, அதுவும் குறிப்பாக கிராமப் பகுதியில் இருக்கின்ற தாய்மார்கள் அவர்களுடைய வாழ்விலே முன்னேற வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்குகின்ற திட்டத்தைப் பொறுத்தவரை இந்தியாவிலேயே தமிழகம்தான் இன்றைக்கு முதன்மை மாநிலமாகத் திகழ்கின்றது என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, கடந்த ஏழு ஆண்டுகளில், 75,448 பெண்களுக்கு கறவைப் பசுக்களை வழங்கியிருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதன் மூலமாக மட்டும் இன்றைக்கு 1,49,426 கன்றுக்குட்டிகள் பிறந்திருக்கின்றன. அதனுடைய மதிப்பு 75 கோடி ரூபாய் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, நான்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்குகின்ற திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்பதற்காக, கடந்த ஏழு ஆண்டுகளில் மட்டும், 8.72 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.34.88 இலட்சம் மதிப்பில் வெள்ளாடுகள் மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன்மூலமாக மட்டும் பிறந்த குட்டிகளின் எண்ணிக்கை 67 இலட்சம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவற்றினுடைய மதிப்பு 1,676 கோடி ரூபாய் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல், இப்போது ஆடு, மாடுகள் தீவனம் இல்லாமல் எங்கேயும் இறக்கவில்லை. மாறாக, அதிக அளவில் ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்கு இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

‘108’ ஊர்தி சேவை மையம்

***8970—திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரியில் ‘108’ அவசரகால ஊர்தி சேவை மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி, சிவகிரியில் ‘108’ அவசரகால ஊர்தி சேவை மையம் அமைக்கப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எப்பொழுது தொகுதிக்குச் செல்கிறார்களோ, அப்போது அங்கே பச்சைக் கொடியுடன் ambulance வாகனம் தயாராக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.